**R 5929 (page 221)**

## உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கள்

## AT PEACE AMONGST YOURSELVES

"வைரம் வைரத்தை வெட்டும்" எனும் பழமொழியினை நாம் அனைவருமே கேட்டிருக்கின்றோம். வைரங்கள் அனைத்தும் மிகவும் கடினத்தன்மை உள்ளவைகளாகவும், மிகவும் தூய்மையானவைகளாகவும் இருக்கின்றன. இந்தக் கடினத்தன்மையானது, அதன் மதிப்பினை அதிகரிக்கின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய ஜனங்கள் யாவரும் வைரங்களாக இருக்கின்றனர் - கர்த்தருடைய கிருபையினால் தூய்மையாக்கப்பட்டவர்களாய் மாத்திரமல்லாமல், உறுதிப்பெற்ற குணலட்சணத்தை உடையவர்களாய் இருக்கின்றனர். இது உண்மையாக இருக்கும்பட்சத்தில், நாம் ஏற்கெனவே சுட்டிக்காண்பித்துள்ளது போன்று, குறைவான கடினத்தன்மையுள்ள பொருட்கள் கூடிக் காணப்படுகையில் இருப்பதைக்காட்டிலும் கடினத்தன்மையுள்ளவைகள் கூடிக் காணப்படுகையிலேயே வெட்டப்படுவதற்கும் மற்றும் உராய்வதற்குமான அதிக அபாயம் காணப்படும். களிமண்ணானது வெட்டுதல் எதையும் பண்ணுகிறதில்லை - களிமண் போன்ற தன்மையிலுள்ள பாத்திரங்களும் வெட்டுதல் எதையும் பண்ணுகிறதில்லை.

இதை நினைவில்கொண்டு, கர்த்தருடைய ஜனங்கள் ஒருவருக்கொருவர் மிகவும் அனுதாபம் பாராட்டுபவர்களாகவும், ஒருவரையொருவர் மிகவும் மதிக்கிறவர்களாகவும் காணப்பட வேண்டும். "குணலட்சணத்தின் உறுதிநிலை, குணலட்சணத்தின் வலிமைநிலை," நோக்கத்தின் மாறாநிலை என்பவைகளை - அதாவது குணலட்சணத்தினுடைய இத்தன்மைகளானது சில சமயங்களில் சில பிரச்சனைகளை ஏற்படுத்துகிறதாய் இருப்பினும், இவைகளை - கர்த்தர் போன்று நாமும் மதித்திட கற்றுக்கொள்கின்றோம். உலகப்பிரகாரமான அமைப்புகளில் காணப்படுவது போலவே, பெரோயா வேதாகம வகுப்புகளிலும் சிலசமயம் சிரமங்கள் காணப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை!

### கர்த்தருடைய ஜனங்கள் சண்டையை வளர்ப்பவர்களல்ல

கர்த்தருடைய ஜனங்கள் தாங்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டுமே ஒழிய, சண்டையினை வளர்ப்பவர்களாக இருக்கக்கூடாது என்றுள்ள தங்களது ஆண்டவரின் விசேஷித்த கட்டளையினை நினைவில்கொள்ள வேண்டும். பிரச்சனையைக் கிளறிவிடுவதற்கு எந்த மாபெரும் திறமையும் தேவைப்படுகிறதில்லை. இருப்பதிலேயே சிறந்த நோக்கங்களுடன் கர்த்தருடைய ஜனங்கள் சண்டைச் சச்சரவை தடுத்திடுவதற்கு, அவர்களுக்குச் சாந்தமும், நிதானமும், பொறுமையும், பரிசுத்த ஆவியினுடைய மற்றக் கனிகளும் அதிகமாய்த் தேவைப்படுகின்றது. எதிராளியானவன் நம்மைச் சமாதானத்தின் பாதையினின்று வழிவிலகப்பண்ணத்தக்கதாக, நம்மைச் சோதிக்காதபடிக்கு நாம் அனைவருமே விழிப்பாயிருப்பது எவ்வளவு அவசியமாயிருக்கின்றது!

நமக்கும், மற்றவர்களுக்கும் இடையே காணப்படும் கருத்துவேறுபாடு ஒன்றின் விஷயத்தில், அது கொள்கை சம்பந்தப்பட்டுள்ளதா என்றோ, அதில் அடிப்படை சத்தியம் ஏதாகிலும் சம்பந்தப்பட்டுள்ளதா என்றோ அல்லது அது கொள்கை சம்பந்தப்படாமல், விருப்புவெறுப்புகள் மற்றும் அபிப்பிராயம் சம்பந்தப்பட்டது மாத்திரமா என்றோ நாம் சரியாய் நிதானிப்பதற்குப் போதுமான அளவுக்கு அனுபவமும், பரத்திலிருந்து வருகின்ற ஞானமும் அவசியப்படுகின்றது. ஒருவேளை அது விருப்புவெறுப்பு மற்றும் அபிப்பிராயம் சம்பந்தப்பட்ட விஷயமாக இருக்கும்பட்சத்தில், சமாதானம் ஏற்படத்தக்கதாக நாம் எதற்கும் அடிபணிய விருப்பமுடையவர்களாய் இருக்க வேண்டும்; ஆனால் இப்படி, கொள்கைகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நம்மால் செய்ய முடியாது. எனினும் சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளினால் ஆதரிக்கப்பட்டதாகவே நம்முடைய விருப்புவெறுப்புகள் காணப்படுகின்றது என்ற வஞ்சனைக்குள் நாம் பெரும்பாலும் உள்ளாகுகின்றோம். இது தவறு என்று அனுபவத்தின் வாயிலாக நாம் கற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் இம்மாதிரியான ஒவ்வொரு எண்ணங்களையும் நாம் கவனமாய் ஆராய்ந்து, நம்முடைய விருப்பு வெறுப்பு மாத்திரமே சம்பந்தப்பட்டதாக இருக்கும் காரியத்திற்கும், கொள்கைகளும், தேவனுடைய போதனைகளும்

சம்பந்தப்பட்டதாக இருக்கும் காரியத்திற்கும் இடையிலான வித்தியாசத்தினை நாம் காண உதவும்படிக்கு, கர்த்தருடைய ஞானத்தினை வேண்டிக்கொள்ள வேண்டும்.

உதாரணத்திற்கு ஒரு சபையில், ஒரு விஷயத்தைக் குறிப்பிட்ட விதத்தில் செய்துவருவது முந்தின காலங்களிலுள்ள வழக்கமாக இருக்கின்றபடியினாலோ அல்லது அவ்விதமே சிறந்த விதமாக இருக்கும் என்று நம்பும் காரணத்தினாலோ, அவ்விஷயத்தினை அக்குறிப்பிட்ட விதத்தில் செய்யும்படிக்குச் சகோதரரோ அல்லது சகோதரிகளோ விமர்சித்து, வலியுறுத்துகின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். தங்களது விருப்பத்தின்படி செய்யப்படவில்லையெனில், அவர்கள் சண்டையிட ஆயத்தமாய் இருக்கின்றனர். விடாப்பிடியாகக் காணப்படும் பட்சத்தில், அதுவும் சரியான பலன் அடையப்பெறுமானால் - அதாவது சபையாருடைய சித்தம் உண்மையில் அடையப்பெறுமானால், மற்றவர்களுடைய விருப்பங்களுக்கு ஆதரவாக, நம் விருப்பங்களை விட்டுக்கொடுத்துவிடுவது ஞானமான வழிமுறையாகும்; ஏனெனில் சபையாருடைய சித்தமே, கர்த்தருடைய சித்தமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்; இல்லையேல் கர்த்தர் காரியத்தினை நன்மைக்கு ஏதுவாய் மாற்றிப்போட்டு, இதன் மூலம் சபையாருக்காக, நமக்குப் படிப்பினை ஒன்றினை அருளுவார்.

சபையிலுள்ள ஒவ்வொரு மற்றும் அனைத்து அங்கத்தினர்களுமே சபையில் பரிசுத்த ஆவியின் கனிகளை - அதாவது சாந்தம், தயவு, பொறுமை, சகோதர சிநேகம், அன்பு, சந்தோஷம், சமாதானம் ஆகியவைகளை அபிவிருத்திச் செய்திடுவதற்கு ஊக்கமாய் நாடிட வேண்டும். இந்தப் பண்புகளை நினைவில் கொண்டு, அவைகளை நாம் செயல்படுத்துவதன் மூலம் இந்த அபிவிருத்தி சம்பவிக்கின்றது; இப்படியாக நாம் மற்றவர்களுக்கு மாதிரியாகக் காணப்பட்டு, நம்முடைய சொந்த இருதயங்களிலும், ஜீவியங்களிலும் கிரியைச் செய்யும் பரிசுத்த ஆவியின் ஆதிக்கத்தினை வெளிப்படுத்துகிறவர்களாக இருப்போம்.

## அடிக்கடி செய்யும் தவறு

நாம் நமது பகுத்துணர்தலைப் பயன்படுத்தி மற்றும் அதன்படி செயல்படுவதோடு நம்முடைய பொறுப்பு நிறைவடைகின்றது என்பதை மறந்துபோய் - முழுப்பொறுப்பும் நம் மீதுதான் காணப்படுகின்றது என்று எண்ணுவது நாம் அடிக்கடி செய்யும் தவறாய் இருக்கின்றது.

சில நுணுக்கமான விஷயங்களில், சபையில் சண்டை சச்சரவுகளைக் கொண்டுவரும் தவறானது, கர்த்தரில் விசுவாசக்குறைச்சல் சம்பந்தப்பட்டதாக இருக்கின்றது. சபை மீதும், தம் ஜனங்கள் யாவர் மீதுமான கர்த்தருடைய அக்கறையையும் மற்றும் நம்முடைய அனுபவங்களையும் - மற்றவர்களுடைய அனுபவங்களையும் நன்மைக்கேதுவாக மாற்றிப்போட அவர் வல்லவராகவும், சித்தமுள்ளவராகவும் இருக்கிறதையும் நாம் நினைவில்கொள்ள வேண்டும். ஒருவேளை காரியங்களானது சபையில் நமக்குப் பிரியமாய் நடந்தேறவில்லையெனில் மற்றவர்களுக்கு அல்லது சபையில் பெரும்பான்மையானவர்களுக்காகிலும் திருப்திகரமாய்க் காணப்படும் அல்லது காணப்படுவதாகத் தோன்றுகிற அக்காரியங்களைக் குறித்துத் தொடர்ச்சியாகக் குற்றங்கண்டுபிடிப்பதற்குப் பதிலாக, காரியத்தினை ஜெபத்தில் கர்த்தரிடம் எடுத்துச்செல்வது மிகவும் நலமானதாயிருக்கும்.

-----------------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com